# அகஇலக்கியங்களில் மகளிரின் பண்பாட்டுச்சிறப்புகள்

**ச. புனிதா**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது**

என்று ஔவையார் கூறினார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திட வேண்டும்மா''**

என்றும்,

**அன்பினுக் காகவே வாழ்பவரார்-அன்பின்**
**ஆவியும் போக்கத் துணிபவரார்**
**இன்ப உரைகள் தருபவரார் - வீட்டை**
**இன்கை யாலொளி செய்பவரார்**

என்றும் பெண்மையைப் போற்றுகிறார். மகளிர் அன்பிற் சிறந்தவர்கள். ஆகையால் தான் ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே'' என இறைவனை மாணிக்கவாசகர் தாயின் வடிவமாக அழைக்கிறார். ''ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்'' என்ற நான்மணிக்கடிகைப் பாடல், மகளிர் இறைவனின் மறுவுருவம் என்று கூறுகிறது. இதற்கு முன் தோன்றிய சங்க இலக்கியங்களும் மகளிரை முதன்மைப் படுத்தியே களவு, கற்பு, அறம், பண்பாடு போன்ற வாழ்க்கைநெறிகளை எடுத்துரைத்துள்ளன. இவ்வாழ்வியல் பழங்கால மக்களின் பண்பாட்டுச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்பதை எடுத்துரைப்பது இதன் நோக்கமாகும்.

## பண்பாடு

தமிழர் அறத்தையே அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படையாகக் கொண்டிருந்தனர். 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்' என்று கலித்தொகை பண்பாட்டுக்கு இலக்கணம் கூறுகின்றது. எல்லோரும் வாழவேண்டுமென்பது தமிழரின் பொது நோக்கம். இதற்கு,

**பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி** **(மணி. 2:70-71)**

மற்றும்,

**பாரக மடங்கலும் பசிப்பிணியறுகென**
**ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்** **(மணி. 16:134-135)**

என்னும் மணிமேகலையின் கூற்று தமிழரின் பொதுநல நோக்கைப் புலப்படுத்துகின்றது என்பதை அறியலாம்.

பண்பாடு ஆழமான பரந்து விரிந்த பொருளை உடைய சொல். பண்பு என்பது தனிமனிதப் பண்பையும், பண்பாடு என்பது சமூகத்தின் பண்பையும் குறிப்பதாகும். தமிழ் நிலம் தொன்மையானது. தமிழ்மொழி மிகுந்த தொன்மையுடையது. தொல் பழங்காலத்தொட்டுத் தமிழ் நிலத்தில் சிறந்த பண்பாட்டு நெறிகள் வளர்ந்தோங்கி உள்ளன. தூய தமிழ் மரபுகள், வாழ்க்கை நெறிகள் காலந்தோறும் தமிழ் இலக்கியத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்பது திருக்குறள் விதித்த விதியாகும். யாரால் உலகம் வாழ்கிறது? என்ற வினாவை எழுப்பி, பண்புடையரால் உலகம் வாழ்கிறது என்ற விடையைப்

புறநானூறு பகர்கிறது. உலகின் மூத்த நாகரிகங்களில் முதன்மையானது தமிழர் நாகரிகம். அது காலப்பழமையில் மட்டுமின்றி நனிநாகரிகக் கூறுகளால் தனித்தன்மை வாய்ந்தது என்று விளக்குகின்றார் அ.கிருட்டிணன்.

**திருமணம்**

சந்தனம் மலையில் பிறக்கிறது. ஆனால் மலைக்குப் பயன்படுவதில்லை. பூசிக்கொள்பவருக்குப் பயன்படுகிறது. முத்து கடல் நீரிலே பிறக்கிறது. ஆனால் அது அணிபவர்க்கே பயன்படுகிறது. இசை யாழிலே பிறக்கிறது. ஆனால் கேட்பவர்க்கு மட்டுமே இன்பம் அளிக்கிறது. இதனைக் கலித்தொகைப் பாடல்

**பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**
**மலையுளே பிறப்பினும் மலைக்கலைவதாம் என்செய்யும்**
**... ... ...**
**யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்** (கலி. 16)

என்று எடுத்துரைக்கிறது. இதன் அடிப்படையில் மகளிர் செல்வச்செழிப்புடைய வீட்டில் பிறந்தாலும், திருமணம் செய்து கொடுத்தல் தமிழரின் மரபு. திருமணம் களவு மணம், கற்பு மணம் என்று இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

**களவு மணம்**

களவு மணம் என்பது ஒத்த பருவம் உடைய ஒருவனும் ஒருத்தியும் சிந்தித்துக் காதல் கொள்வது ஆகும். முதற்சந்திப்பில் அவர்களின் விழிகள் உரையாடின. விழி உறவு நெட்டுறவிற்கு வழிகோலியது. மீண்டும் சந்தித்து உரையாடினர். இந்த உறவு இரவும் பகலுமாகத் தொடர்ந்தது. இருவரும் பெற்றோர் உடன்பட மணஞ் செய்து வாழ விழைந்தனர். பெற்றோர் ஒப்புக்கொள்ளாதபோது, முரண்பாடு ஏற்படின் தலைவியை அழைத்துக் கொண்டு தலைவன் உடன்போக்கு சென்று தனிக்குடித்தனம் நடத்துவது தடையின்றி ஒப்புக்கொள்ளப்பட்டது. அதுவே அறவழி என்னும் கருத்தும் பெற்றது. இதனைக் கலித்தொகைப் பாடல்,

**நடுவு இகந்து ஒரீஇ நயன் இல்லான் வினை வாங்க,**
**... ... ...**
**சொல்லுவது உடையேன்: கேண்மின,மற்று ஐஇய!"** (கலி. 8)

என்று விளக்குகிறது.

**கற்புமணம்**

பெற்றோரும், உடன்பிறந்தோரும், உறவினரும், நண்பரும், ஊரும், உலகமும், அறியும் படியாக நிகழும் மணம் கற்பு மணம் எனப்பெற்றது. இக்கற்பு மணம் தோன்றியதற்கான காரணத்தைத் தொல்காப்பியர் மிகத்தெளிவாகக் கூறுகிறார். கற்பு மணத்திற்குரிய மணச்சடங்கு கரணம் எனப்பெற்றது. தமிழ் இலக்கணங்களில் முன்னோடியான தொல்காப்பியம்

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப** (தொல். 1091)

என்று உணர்த்துகிறது. களவு மணத்தில் ஏற்பட்ட பொய்யும் வழுவுமே 'கற்பு மணம்' என்ற அமைப்பு தோன்றக் காரணங்களாக இருத்தல் வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். திருமணத்தைக் கற்பு என்றும், வரைவு என்றும் கூறும் பழக்கம் இருந்துள்ளது. பெற்றோர் முன்னின்று நடத்தும் திருமணமும் இருந்தது.

**கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதே** (தொல். 1088)

கொடுப்போர், கொள்வோர் திருமணமே சமுதாயத்தில் சிறப்புடையதாகக் கருதப்பட்டுள்ளது. நீண்டநாள் களவு வாழ்க்கை நடத்திய தலைவன் கற்பு வாழ்வு நடத்தத் துணிந்து, முறைப்படி தலைவியின் பெற்றோரிடத்துப் பெண் கேட்க ஊர் முதியோர் நால்வரை அனுப்பி வைப்பதை,

**அம்மவாழி! தோழி! -நம்ஊர்ப்**
**பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ?-**
**தண்டுடைக் கையர், வெண்தலைச் சிதலவர்** (குறு. 146)

என்ற குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள வெள்ளி வீதியார் பாடல் உணர்த்துகிறது. பெற்றோர் இல்லாது நடக்கும் திருமணமும் இருந்தது. இரண்டு வகைத் திருமணமும் அன்றைய சமுதாயத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டன. இதனைத் தொல்காப்பியர்,

**கொடுப்போர் இன்றியுங் கரணம் உண்டே**
**புணர்ந்து உடன்போகிய காலையான** (தொல். 1089)

என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல் திருமணம் நடைபெறுவதற்கு முன் மணமகன், மணமகளுக்கான பொருத்தம் பார்ப்பது இன்று நிலவிவரும் பழக்கத்திற்கான பத்துப் பொருத்தங்களை,

**பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு**
**உருவு நிறுத்த காம வாயில் நிறையே,**
**அருளே, உணர்வோடு திருவெனமுறையுறக்**
**கிளந்த ஒப்பினது வகையே** (தொல். 1219)

என்னும் நூற்பா விளக்குகிறது.

**பரிசமளித்தல்**

பெண்ணுக்கு மணமகன் பரிசளிக்கும் வழக்கம் தொன்றுதொட்ட தமிழர் மரபாகும். அன்று இது முலைவிலை, சிறுவளை விலை, பரியம் என்று அறியப்பட்டது. பாசிலை விலையென்றும் இதற்குப் பெயர் உண்டு. இதனை,

**முழங்குகடல் முழவின் முசிறி அன்ன**
**நலம்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்**
**புரையர் அல்லோர் வரையலள் இவள் எனத்** (புறம். 343)

என்ற சான்றினால் சங்ககாலத்தில் மணமகன் பெண்ணுக்குப் பரிசளித்துத் திருமணம் நடத்தியதை அறியமுடிகிறது. திருமணம் ஆகும் பெண்ணுக்கு வெண்ணூல் சூட்டுதல் என்ற சடங்கு நடைபெற்றதை அகநானூற்றுப் பாடல் வழி அறியலாம்.

**மென்பூ வாகைப் புன்புறத் கவட்டிலை**
**... ... ...**
**தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி** (அகம். 136)

வாகையிலையினையும், அருகம்புல்லின் கிழங்கினையும் முகையோடு சேர்த்துக் கட்டிய வெண்ணூல் மணமகளுக்கு அணிவிக்கப் பெற்றதாகத் தெரிகின்றது. இந்த அணி ஒருவிதத்தில் தாலியை ஒத்திருப்பது போன்றதாக இப்பாடல் விளக்குகிறது. தமிழரிடையே 10-ஆம் நூற்றாண்டளவில்தான் தாலி கட்டும் மரபு ஏற்பட்டது. ‘‘இழை’’ என்ற சங்கத் தமிழ்ச்சொல் தாலியைக் குறித்து வழங்கியதை,

**வால் இழை மகளிர் நால்வர் கூடி** (அகம். 86)

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. ‘‘இழை’’ என்ற சொல் மங்கல அணி அல்லது தாலியைக் குறித்ததாக இருக்கலாம் என்று அறியமுடிகிறது. ஏனென்றால் கரிகாலன் இறந்தபோது அவன் மகளிர் இழை களைந்தனர் என்று புறப்பாடல் விளக்குகிறது.

**மெல் இயல் மகளிரும் இழை களைந்தனரே** (புறம். 224)

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் கண்ணகியின் திருமணம் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட நடந்தது. மணமக்கள் இருவரும் தீ வலம் செய்வதனைக் காணக்கொடுத்து வைத்தவர்களை அடிகள் பாராட்டுகிறார்.

**சிலம்புகழி நோன்பு**

சங்க காலத்தில் பெண் குழந்தைகளுக்குப் பாலுண்பருவத்தில் கால்களில் சிலம்பணிவிக்கும் பழக்கம் உண்டு. திருமணம் முடிந்த பெண்கள் சிலம்பினை அகற்றி விடுதலே இன்றியமையாத செயலாக இருந்துள்ளது. இது ஒரு சமுதாய மரபாகவும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதுவே சிலம்புகழி நோன்பாகவும் திருமணத்திற்கு முன் நடைபெறும் ஒரு சடங்காகவும் இருந்துள்ளது.

**நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம் மனை வதுவை நல் மணம் கழிக (ஐங். 399)**

என்ற பாடலடிகள் ஒரு நற்றாயின் விருப்பத்தை உணர்த்துகின்றன. சிலம்புகழி நோன்பு தலைவன் இல்லத்திலும், திருமணம் தலைவியின் இல்லத்திலும் நடைபெறுதலே வழக்கமாகும். சிலம்புகழி நோன்பு தலைவன் இல்லத்தில் நடந்தாலும், திருமணமாவது தன் இல்லத்தில் நடைபெற வேண்டும் என நற்றாய் வேண்டுகின்றாள். இதன் வழியாகச் சங்க காலத்தில் திருமணத்தின் சடங்காகவே இந்தச் சிலம்புகழி நோன்பை மேற்கொண்டுள்ளனர் என்பதை அறியலாம்.

**விருந்தளித்தல்**

திருமணத்திற்கு வந்திருக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும், உளுந்தம் பருப்புப் பெய்து சமைத்த செவ்விய குழைதலையுடைய பொங்கலோடு மிக்க சோற்றினையும் இட்டனர். அதனை உண்ணும் போது ஏற்படும் ஆரவாரம் இடையறாது ஒலிக்கின்றது என்பதை,

**உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை**
**பெருஞ் சோற்று அமலை நிற்ப (அகம். 86)**

என்ற சங்கஅகப்பாடலிலிருந்து உணரலாம். திருமண நாளன்று செம்மறியாட்டின் பாலில் விளைந்த தயிர், கொல்லையில் விளைந்த வரகைக் குற்றியெடுத்த அரிசி, ஈசல் ஆகியவற்றில் இட்டுச் சமைத்த இனிய புளிப்பையுடைய சூடான சோற்றை, பசு வெண்ணெய் மேலேயிருந்து உருக விருந்தளித்தனர்.

**சீதனம் தருதல்**

தாய்வழிச்சமூகத்தில் திருமணம் நிச்சயித்தவுடன் மணமகன் வீட்டார் மணமகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையுடன் ஆடைகளைச் சீதனமாகத் தருதல் வழக்கமாகும். இதனைப் பரிசப் பணம் என்பர். மணமகளுக்குப் பரிசம் மணமகன் வீட்டாரிடமிருந்து வழங்கப்படுவது பழக்கம். இப்பரிசம் அணிகலன்களாகவோ அல்லது பணமாகவோ, நிலம் போன்ற சொத்தாகவோ வழங்கப்பெறும். மணமகளின் பெற்றோர் கேட்கும் பரிசத்தொகை அனைத்தையும் கொடுத்தால்தான் திருமணம் நடக்க ஒப்புதல் அளிக்கப்படும். இதனை,

**நறுநுதல் அரிவை பரிசிழை விலையே (அகம். 90)**

என்ற பாடலில் மருதனிள நாகனார், தலைவியின் பரிசுத்தொகை என்ன, எவ்வளவு என்பதைத் தலைவனிடம் கூறுவதாகக் குறிப்பிடுகின்றார்.

**தாய்மை நிலை**

இலக்கிய மாந்தர்களில் உயர்ந்த நிலைக்குரிய பல பெயர்கள் இருப்பினும் ‘‘தாய்’’ என்ற உறவுக்கு அப்பெயர்கள் ஈடாகாது. சங்கத் தாய்மார்கள் தன் குழந்தைக்கு அன்பு காட்டுதல் மட்டுமன்றிப் பாலூட்டுகின்ற காலத்தே நற்பண்புகளையும், வீரத்தையும் ஊட்டி வளர்த்தனர். ஒரு குடும்பத்தில் தாயின் பங்கு மிக முக்கியமான ஒன்றாகும். குடும்பத்திலே பண்பைக்காட்டிப் போற்றியும், மனித

நேயத்தை அவர்களிடம் காட்டியும் சிறப்புப் பெறுபவள் தாய். உலகத்து உயிர்கட்கெல்லாம் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் தாயன்பையே பெரிதாக மதித்திருப்பதைக் காணலாம். தலைவியின் மென்மையான அன்பினைத்

**தாய்போல் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்வினைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
**கவவொடு மயங்கிய காலையான** (தொல். 1119)

என்று தொல்காப்பியர் விளக்குகிறார். எனவே, உலகில் எல்லா உறவுகளிலும் தாய் அன்பே தலைசிறந்தது எனக் கருதுவதில் தொல்காப்பியருக்கு உடன்பாடு உண்டு எனலாம். இச்சிறப்பைக் கருதி 'உலகத்து உயிர்களிலே நல்லுறவு கொண்டாடத் தகுந்த ஒரே உயிர் தாய் தான்' என்று கூறுகிறார்.

**வளைகாப்பு**

களவு முடிந்து, கற்பு வாழ்க்கைக்குச் சென்ற தலைவனும், தலைவியும் இன்புற்று வாழ்கின்றனர். அவர்களின் இல்லற வாழ்வு சிறப்பாக அமைந்தமைக்கு எடுத்துக்காட்டாக, தலைவி தாய்மைநிலை அடைகிறாள். வளைகாப்பு என்பது மகளிர் அனைவருக்கும் முதல் குழந்தை தரிக்கும்பொழுது நடத்தப்படுவதாகும். மகளிர் பத்துத்திங்கள் கருவுற்றிருத்தலும், வயா(குழந்தைபேறுப் பெற்ற மகளிர்) நோயுற்ற மகளிர் புளிப்புச் சுவையுடைய பொருள்களை விரும்புவர் என்பதையும் இப்பாடல் அடிகளில் காணலாம். மேலும், கன்னியராய் இருந்து பின் கொண்ட முதற்சூல் ஆதலின் 'கடுஞ்சூல்' என்று கூறப்பட்டது. குட நாட்டு வீரக்குடி மகளிர் கருக்கொண்டால், அவர்க்குக் கரைத்த பசும்புளியை ஒரு வாளியின் வழியாக வாயில் வார்ப்பதைச் சடங்காகச் செய்வது தொன்று தொட்டு இருந்து வருகின்றது எனவும், இதுவே பசும்புளி வேட்கைக்கு ஏதுவாகும் எனவும் இரா.இராகவையங்கார் சான்று காட்டுகிறார். இதனை,

**ஓதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர் போல நீர் கொண்டு** (குறு. 287)

என்று குறுந்தொகையும்,

**புளிங்காய் வேட்கைத்தன்று, நின்**
**மலர்ந்த மார்பு, இவள் வயா நோய்க்கே** (ஐங். 51)

என்று ஐங்குறுநூறும்,

**வயவுறு மகளிர் வேட்டு உணின் அல்லது,**
**பகைவர் உண்ணா அரு மண்ணினையே** (புறம் 20:14-15)

என்று புறநானூறும் எடுத்துக்காட்டுகின்றன.

**குழந்தைப் பேறு**

குழந்தையைப் பத்து மாதம் சுமந்தவள் தலைவி என்பதைக் குறுந்தொகைப் பாடல் பின்வருமாறு விளக்குகிறது,

**முந்நால் திங்கள் நிறைபொறுத் அசைஇ**
**ஓதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்**
**கடுஞ்சூல் மகளிர்** (குறு- 287)

'மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே' என்று மக்கட்பேற்றின் சிறப்பைப் புறநானூறு எடுத்துரைக்கிறது.

**படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**... ... ...**
**பயக் குறை இல்லை-தாம் வாழு நாளே** (புறம். 188)

அதாவது செல்வம் பலவற்றையும் உடையவராய் பலருடன் கூடி இருந்து உண்பவராயினும் அவர் பெற்ற செல்வத்தால் வாழ்வின் பயன் ஒன்றும் இல்லை என்று மக்கட்பேற்றின் அவசியத்தை விளக்கியதை உணரமுடிகிறது. இல்லறத்தின் பயன் பலவாகும். அவற்றுள் மக்கள் பேறு தலையானதாகும். திருவள்ளுவர் இதனைத் தெளிவாக உரைக்கிறார்.

**பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த**
**மக்கள்பேறு அல்ல பிற** (குறள் 61)

**நிறைவுரை**

மக்களின் அன்றாட வாழ்வில் நிகழும் பழக்கங்கள், வழக்கங்களாக அமைந்து பின்னர் அவையே நாகரிகப் பண்பாட்டுச் செயல்முறைகளாக மாறிவிடுகின்றன. இவை யாவும் மக்களின் வாழ்வில் பல்வேறு தாக்கங்களையும், வாழ்க்கையின் மீது பற்றினையும் உண்டாக்குகின்றன. தமிழரிடையே காணப்படும் இத்தகைய மணச்சடங்குகள் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டவையாக உள்ளதால், கன்னி மகளிராக இருந்து கற்பு நிலைக்குச் சென்றவுடன் மகளிர் தாய்மைநிலை, வளைகாப்பு, குழந்தைப்பேறு என்ற பழங்கால பண்பாட்டுடன் இணைகின்றனர். ஆகையால் அக இலக்கியங்கள் இதனை மகளிரின் வாழ்வியல் விழுமியங்களாக எடுத்துரைத்துள்ளதை இக்கட்டுரையின் வழி அறியமுடிந்தது.

**பார்வை நூல்கள்**


1. அ.கிருட்டிணன், தமிழர் பண்பாட்டியல்,
2. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி 13
3. இ.சுந்தரமூர்த்தி, இலக்கியச்சுடர்
4. இளங்குமரனார், இலக்கியம் கூறும் தமிழர்வாழ்வியல்
5. பரிமேலழகர் உரை, திருக்குறள்
6. எட்டுத்தொகை நூல்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்